www.tamilarangam.net

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி

EELAM PEOPLE'S REVOLUTIONARY LIBERATION FRONT

# இலக்குகளை மறந்தவர்களின் பிற்போக்குத்தனம்.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் முன்னணித் தோழரும் மக்கள் விடுதலைப் படையின் வவுனியாப் பிராந்தியப் பொறுப்பாளருமான தோழர் இன்பராஜா (ரேகன்) கோரத்தனமாகவும், கோழைத்தனமாகவும் தமிழீழ விடுதலைப் புலிகளின் வவுனியாப் பிராந்தியத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். இந்தப் படுகொலை வன்னிப் பிரதேச மக்களிடையே பெரும் அதிர்ச்சியையும் சீற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

தோழர் இன்பராஜா- ஈழமக்களை வெகுவாக நேசித்தவர். மாணவப் பருவத்திலே ஈழ மாணவர் பொதுமன்றத்தில் இணைந்து தனது பங்களிப்பை செலுத்தியவர். பல்கலைக் கழக அனுமதியைப் பெற்ற பொழுதும் ஸ்ரீலங்காவின் நவபாசிச அரசு ஈழமக்கள் மீது நிகழ்த்திவரும் வெறியாட்டங்கள் கண்டு கொதித்து மக்கள் விடுதலைப் படையில் இணைந்து பல சிரமங்களுக்கு மத்தியில் எல்லைப் பிரதேசமான வவுனியாவில் கூலிப்படைகளுக்கெதிரான பல தாக்குதல்களை முடுக்கியவர். சர்வதேச விடுதலை ஸ்தாபனம் ஒன்றில் தனது இராணுவப் பயிற்சியைப் பெற்ற தோழர் தான்பெற்ற பயிற்சியை பலநூறு தோழர்களுக்கு அளித்ததுடன் மாத்திரமின்றி வவுனியாப் பிரதேசத்தின் மக்கள் விடுதலைப் படையின் பொறுப்பாளராகி மக்களோடு மக்களாய் கலந்து போராட்டப் பணிகளில் ஈடுபட்டவர். இத்தகைய தோழர் இன்று எம்மிடையே இல்லை. ஆயிரக்கான ஆயுதப் படைகளாலும், அவர்களது நவீன ஆயுதங்களாலும் கொல்ல முடியாமல் போன எமது தோழர். சமாதானம் பேசவென சதிகாரர்களால் அழைக்கப்பட்டு, நிராயுதபாணியாக்கப்பட்டு கோரத்தனமாக கொல்லப்பட்டுள்ளார்.

தோழர் இன்பராஜாவின் படுகொலையை வன்னி வாழ் மக்கள் வன்மையாக கண்டித்துள்ளனர். எதிர்ப்பாளர்களது அத்தனை பொய்ப்பிரச்சாரங்களையும் அலட்சியம் செய்து துப்பாக்கி வேட்டுக்களுடன் நிகழ்ந்த தோழரின் இறுதி ஊர்வலத்தில் பம்பைமடுவிலிருந்து பூவரசங்குளம் வரை பெருந்திரளாகக் கலந்துகொண்டு தமது இறுதி அஞ்சலியைத் தெரிவித்தனர். மக்களுக்காக தோழருக்கு மரணதண்டனை வழங்கியதாக தமது படுகொலைக்கு நியாயம் வழங்க முற்பட்டவர்கள் தோழர் ரேகனையும் இதர தோழர்களையும் எவ்வித ஊறுமின்றி விடுதலை செய்ய வேண்டும் என்ற மக்களின் வேண்டுகோளையும் நிராகரித்து மிருகத்தனமாக மேற்கொண்ட இந்தப் படுகொலை இவர்களின் வக்கரித்துப்போன மக்கள் விரோதப் போக்கையும், தான் தோன்றித் தனத்தையுமே காட்டுகின்றன.

எமது இயக்கத்தின் புரட்சிகரத் தன்மையை ஜீரணிக்கமுடியாத சக்திகளால் எம்மைப் பற்றிய பொய்ப் பிரச்சாரங்கள் தங்குதடையின்றி கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் இந்த நிலையில் உண்மைச் சம்பவம் பற்றிய விளக்கங்களை மக்களுக்கு தெரிவிக்க நாம் கடமைப்பட்டு உள்ளோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி

# EELAM PEOPLE'S REVOLUTIONARY LIBERATION FRONT

EPRLF

EPRLFஇன் வெகுஜன அமைப்பான ஈழ மக்கள் விடுதலை முன்னணி (EPLF)யின் தோழர்கள் இருவர் மக்களின் உதவியைப் பெற்று இயக்கத்தை வளர்க்கும் தமது அன்றாடப் பணிகளை நிகழ்த்தும் வகையில் அரிசி சேகரிப்புக்காக உதயா அரிசி ஆலைக்கும் சென்றனர். இவ்விரு தோழர்களும் உதயா அரிசி ஆலை உரிமையாளராலும், அவரது கையாட்களாலும் கீழ்த்தரமாகப் பேசப்பட்டு, இயக்கமும் கொச்சைப்படுத்தப்பட்டு, தோழர்களும் தாக்கப்பட்டனர். நிராயுதபாணிகள் தாக்கப்பட்டு, இயக்கம் கேவலப்படுத்தப்பட்ட சம்பவத்தினை விசாரித்து பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காக EPRLFஇன் ஆயுதப்பிரிவான மக்கள் விடுதலைப்படையை (PLA) அனுப்ப வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆலையில் மக்கள் விடுதலைப்படைத் தோழர்கள் பொல்லுகளாலும், இரும்புக்கம்பிகளினாலும் தாக்கப்பட்டனர். எமது தோழர்கள் சென்ற வாகனம் சேதப்படுத்தப்பட்டது. அரிசி ஆலை உரிமையாளரது கையாட்களுடன் தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களும் சேர்ந்து நடத்திய இந்த மிலேச்சத்தனமான தாக்குதலின் போது தற்பாதுகாப்புக்காக எமது தோழர்கள் நிகழ்த்திய துப்பாக்கிப் பிரயோகத்தின்போது துர்ப்பாக்கியமான வகையில் ஆலை உரிமையாளர் மரணமடைந்தார். மனவருத்தத்திற்குரிய இந்தச் செயல் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட ஒன்று. ஆலை உரிமையாளருடன் எமது இயக்கத்திற்கு எந்தப் பிரச்சனையும் இல்லை. இதுதவிர மேற்படி உரிமையாளரின் ஒரு மகன் எமது மக்கள் விடுதலைப் படையின் உறுப்பினர். மேற்படி சம்பவம் நடந்த போது எமது தோழர்களுடன் அந்த இடத்தில் இருந்தவர். அவரே அங்கு நடந்த சம்பவங்கள் அனைத்திற்கும் உண்மையான சாட்சி.

உண்மை இப்படியிருக்க தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த குழுவினர் எமது இயக்கத்திற்கு எதிரான தமது பிரச்சாரங்களை முடுக்கிவிட்டனர். எம்மைக் கொள்ளைக்காரராகவும், கொலைகாரராகவும் சித்தரித்து தம்மை கட்டுப்பாடுமிக்க நியாயவான்களாகக் காட்டியதுடன் தம்மை விட வேறுயாருமே ஈழப் போராட்டத்தை முன்னெடுக்க முடியாது என்ற வகையில் பிரச்சாரம் செய்தனர். ஆலை உரிமையாளருக்கு ஆதரவாக இக்குழுவினர் ஹர்த்தால் அனுஷ்டிக்கும்படி விடுத்த வேண்டுகோளை வவுனியா மக்கள் நிராகரித்தனர். தமது பொய்ப்பிரச்சாரங்களுக்கு மக்கள் செவிமடுக்காதது கண்டு ஆத்திரமடைந்த, கொலைவெறி பிடித்த இந்தக் கும்பல் தோழர் ரேகனையும் மற்றும் இரு தோழர்களையும் சமாதானம் பேச என அழைத்தனர். இத்தோழர்களை விடுதலை செய்ய வேண்டுமென வவுனியா மக்கள் விடுத்த வேண்டுகோளையும் அலட்சியம் செய்து, ஒரு மகத்தான தோழனை, ஈழப்போராட்டத்திற்காக தன்னை அர்ப்பணித்தவனை, எதிரிக்கு எதிராக ஆயுதம் ஏந்தியவனை, கொன்று தமது இரத்த வெறியை தீர்த்துக்கொண்டது. தமது கரங்களில் படிந்துள்ள ஒரு நெறி தவறாத் தோழனின் இரத்தக்கறையை மறைப்பதற்கு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இயக்கத்தின் மீதும், தோழனின் மீதும் அபாண்டங்கள் சுமத்தப்பட்டன.

ஈழத்தின் விடியலுக்காக துப்பாக்கி ஏந்திய இளம் குருத்துக்கள் சுட்டுக்கொல்லப்பட்டது இது முதல் தடவை அல்ல. துப்பாக்கி யாருக்கு எதிராக என்பதைப் புரிந்துகொள்ளாத கொலைவெறியாளர்கள் நடத்தும் குரூர ராஜாங்கம் தொடர்கின்றது. சுந்தரம், இறைகுமாரன், உமாகுமாரன் ஒபரோய் தேவன், மனோ மாஸ்டர், இன்று தோழர் றேகன் என பட்டியல் நீள்கிறது. நடத்தப்பட்ட இந்தப்படுகொலைகள் யாவும் போராட்டம் முனைப்புறுத்தப்பட்டிருந்த ஒவ்வொரு கட்டத்திலே மக்களின் கவனத்தை போராட்டத்திலிருந்து திசைதிருப்புவதற்காக மேற்கொள்ளப்பட்டவையே என்பதை இக்கொலைகளின் காலகட்டங்களை ஆராய்ந்து பார்க்கையில் தெளிவாகும். இத்தகைய படுகொலைகளை தொடர்ந்து நாம் மௌனமாக அனுமதிப்போமானால் அது ஈழப்போராட்டத்தை நீளக்குழிவெட்டி ஆழப் புதைக்கும் செயலாகவே அமையும். எனவே மக்கள் விழிப்படைந்து இக்கொலைகளுக்கான காரணங்களைக் கண்டறிவதுடன் கொலையாளர்களை நெறிப்படுத்த வேண்டியதும் வரலாற்றுக் கட்டாயம்.

இத்தகைய தான்தோன்றித்தனமான செயல்களுக்கு அடிப்ப-டைக் காரணம் ஈழப்போராட்டத்தை தம்மால் மாத்திரமே முன் எடுக்கமுடியும் என்று இறுமாப்புக்கொண்டுள்ள ஒரு கூட்டத்தினரின் கற்பனைவாதப்போக்கே. விடுதலை வெறியை மக்களிடையே வளர்ப்பதற்குப் பதிலாக இயக்க வெறியை மக்களிடையே தூண்டிவிட்டு தொடர்ச்சியாக மக்களைப் பிரித்து வைத்து போராட்டத்தை பின்னடிக்கும் செயல்களையே இந்தக் கூட்டத்தினர் தொடர்ச்சியாகச் செய்து வருகின்றார்கள். இதர இயக்கங்கள் மீது வசைபாடுவதாலும், மிலேச்சத்தனமான தாக்குதல்களை நடத்துவதாலும் தாங்கள் வலிமை பெற்றுவிடுவோம் என்ற கற்பனையில் மிதக்கும் இவர்கள் மக்கள் அணிதிரட்டப்படும் வரை இயக்கம் வலிமை பெறுவது இல்லை என்ற உண்மையை உணர்ந்து கொள்ளும் திறன் அற்றவர்களாகவே இருக்கின்றார்கள். தனித்துவம் பேணவிரும்பும் தம்மாலேயே போராட்டம் முன்னெடுக்கப்படும் என்ற இவர்களின் பிரமை உண்மையிலே வெறும் மாயையே.

எதிர்ப்புரட்சிசக்திகளின் இந்தப் பிற்போக்குச் சதிகள் ஈழப்போராட்டத்தை நசுக்கிவிட பலமுனைகளாலும் செயற்படும் ஸ்ரீ லங்கா அரசை பல வழிகளிலும் பலப்படுத்துகின்றன. இயக்கங்களை பிரித்தாளமுனையும் ஆக்கிரமிப்பாளரின் தந்திரமும், ஈழப்போராட்டத்தின்பாலும், ஈழவிடுதலை இயக்கங்கள் மீதும் மக்களை நம்பிக்கை இழக்கச் செய்யும் அரசின் பிரச்சார முயற்சிகளுக்கும் இந்த எதிர்ப் புரட்சிச் சக்திகள் அறிந்தோ அறியாமலோ துணைபோகின்றன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போராட்டம் தொடர்பான உண்மைகளைப் புரிந்தே மக்கள் அணிவகுக்க முடியுமே ஒழிய வெறும் மாயைகளின் பின்னால் அணிதிரண்டு போராட்டத்தை ஒரு போதும் முன்னெடுக்க முடியாது. எனவே மக்கள் உண்மைகளை ஆராய்ந்து புரிந்து கொள்ள வேண்டும். இன்று போராட்டத்தினை முன்னெடுக்கும் சக்திகளிடையே கலந்திருக்கும் விஷ வித்துக்களைக் கண்டறிந்து நிராகரிக்க வேண்டும். ஐக்கியப்பட்ட போராட்டத்தை முன்னெடுக்க அனைத்து இயக்கங்களையும் தூண்ட வேண்டும்.

இந்த அவலங்களுக்கும், இன்னல்களுக்குமிடையே வாழும் எமது மக்கள் அமைதியாகவும், கௌரவமாகவும் வாழ்வதற்கான இறுதித் தீர்வு ஈழம் மாத்திரமே. இத் தீர்வை அடைவதற்கு நாம் நீண்டதுமான, கடினமானதுமான போராட்டப்பாதையில் செல்ல வேண்டும். எம்மைப் பொறுத்தவரையில் இப்போராட்டமானது தனி நபர்களிலோ அன்றி குழுக்களிலோ தங்கியில்லை. ஈழப்போராட்டத்தை நெறிப்படுத்த வேண்டிய அனைத்து சக்தியும் ஈழமக்களிடமேயுள்ளது. இன்னல் மிகுந்த இந்தக் காலகட்டத்தில் ஈழமக்களை மேலும் வதைத்து சமூகவிரோதச் செயல்களை செய்பவர்கள் மீது இயக்கங்கள் எடுக்கும் நடவடிக்கைகளை நாம் ஆட்சேபிக்கவில்லை. ஆனால் இதைச் சாட்டாக வைத்து இயக்கப் போராளிகள் மீது தாம்கொண்ட பகைமையைத் தீர்த்துக்கொள்ளச் சிலர் மேற்கொள்ளும் இத்தகைய நடவடிக்கைகளை மக்கள் அனுமதிக்கக் கூடாது. அனுமதிக்கவும்மாட்டார்கள் என்பதை 27ந் திகதி மக்கள் காட்டிய எதிர்ப்பு எடுத்துக்காட்டுகின்றது.

எனவே ஆக்கிரமிப்பாளர்களுக்கெதிராக தம்மையே அர்ப்பணித்து துப்பாக்கி தூக்கிய போராளிகள் கோரத்தனமாக கொல்லப்படும் சம்பவங்களிலிருந்து மக்கள் தம்மை அந்நியப்படுத்திக் கொள்ளாது இந்த அநீதிகளைச் செய்பவர்களை நெறிப்படுத்தும் செயலை தமது வரலாற்றுக் கடமையாகச் செய்ய வேண்டும்.

இயக்க வெறிக்கு அப்பாற்பட்டு ஈழவிடுதலை ஒன்றையே தமது நோக்கமாகக் கொண்டு போராடும் அனைத்து விடுதலைப் போராளிகளையும் ஐக்கியப்படுத்தி எமது போராட்டத்தை முன்னெடுப்பதன் மூலமே ஸ்ரீலங்கா நவபாசிச அரசின் அடக்குமுறை ஆட்சியிலிருந்து எமது மக்கள் விடுதலை பெறமுடியுமென பூரணமாக நம்புகிறோம்.

சோதனையான இக்காலகட்டத்தில் நிதானமாகவும், பொறுமையாகவும் நடந்து எமது மக்களின் சுதந்திரத்தையும் அமைதியான வாழ்வையும் மீட்டெடுப்போம்.

ஐக்கியத்திற்காகப் போராடுவோம்.
போராடுவதற்காக ஐக்கியப்படுவோம்.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி.
13.12.1985.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்